# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8076297

C

1. District : Coimbatore மாவட்டம் | PS: V&SAC காவல்நிலையம் | Year: 2021 ஆண்டு | FIR No.: 4/2021/AC/CB மு.த.அ. எண் | Date: 27.01.2021 நாள் 17.00 hrs

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 30 days from | Date to : நாள் வரை 25.01.2021
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 29.12.2020 | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.01.2021 | Time : நேரம் 1600 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27.01.2021 | Time : நேரம் 1600 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Tasmac shop No.2232 - Bar Echanari - Podanur Road, near L&T Company Coimbatore. approximately 16 km South
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Vinoth | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Rajendran
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 27/2021 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Bar incharge | (g) Address : முகவரி Tasmac Shop No.2232 - Eachanari to Podanur Road, near L&T Company Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Mr. [illegible], Salesman of Tasmac Shop No 2232, Eachanari to podanur Road, near L&T Company, Coimbatore
   2) P. Saravanan, Salesman of Tasmac Shop No. 2232, Eachanari to podanur Road, near L&T Company Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

27/01/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

27/1/2021

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலையப் பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 27-01-2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B. Sasikala
Rank: நிலை Inspector of Police No. எண்
[illegible], Coimbatore.
27-01-2021

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

<u>கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/2021/AC/CB, u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...</u>

27.01.2021-ம் தேதி புதன்கிழமை மாலை 16.00 மணியளவில் காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது R.வினோத், வயது-27, த/பெ.ராஜேந்திரன், கதவு எண்.27, ஜி பிளாக், ஆறுமுகம் நகர், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் என்பவர் 'கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கோயம்புத்தூர் மாவட்டம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையில் எதிரிகளின் நற்பெயர் குறித்து ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகாரில் சொல்லப்பட்டது போல் புகார்தாரிடம் அரசு மதுபான கடை எண்.2232 சேல்ஸ்மேன்கள், திரு.லெனின் மற்றும் திரு.சரவணன் ஆகியோர்கள், புகார்தாரரிடம் கடைக்கு மது வாங்க வரும் நபர்களை பாருக்குள் அனுப்பி வைப்பதற்காகவும், பார் சம்பந்தமாக ஏதேனும் புகார்கள் வந்தால் அதனை உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்காமல் இருப்பதற்காகவும் ரூ.70,000/- மாமூலாக பணம் கேட்டிருப்பது தெரியவந்தது. மேலும் புகார்தாரரின் முன்நடத்தை மற்றும் புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் அவரது புகார் நம்பகதன்மை கொண்டது என்றும் தெரியவந்ததால் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 27.01.2021-ம் தேதி மாலை 17.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக குற்ற எண் 4/2021/AC/CB, u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி மேற்படி எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் R.வினோத், வயது-27, த/பெ.ராஜேந்திரன், கதவு எண்.27, ஜி பிளாக், ஆறுமுகம் நகர், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கோயம்புத்தூர். அய்யா, நான் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, ஆறுமுகம் நகர் கதவு எண்.27 ஜி பிளாக்கில் குடியிருந்து வருகிறேன். இராமநாதபுரம் மாவட்டம், தேவகோட்டையைச் சேர்ந்த சிவமணி த/பெ.துரைராஜ் என்பவர் கோயம்புத்தூர் மாவட்டம், ஈச்சனாரி -

போத்தனூர் ரோடு, எல் அண்ட் டி கம்பெனி அருகில் டாஸ்மாக் மதுபான சில்லரை விற்பனை கடை எண்.2232 உடன் இணைந்த பார் நடத்தி வருகிறார். அந்த பாரின் உரிமம் டாஸ்மாக் கோயம்புத்தூர் தெற்கு மாவட்ட மேலாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1170/2019/RV2 நாள் 18.02.2020-ன்படி 01.11.2019 முதல் 31.10.2021 தேதி வரை திண்பண்டங்கள் விற்பனை செய்யவும், மது அருந்துபவர்கள் அன்றாடம் விட்டுச் செல்லும் காலிபாட்டில்களை சேகரிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பாரில் நான் பார் இன்சார்ஜ்- ஆக கடந்த 2 வருடங்களாக வேலை செய்து வருகிறேன். எனக்கு மாத சம்பளமாக ரூ.10,000/- கொடுக்கிறார். டாஸ்மாக் மதுபான சில்லரை விற்பனை கடை எண்.2232 மதியம் 12 மணி முதல் இரவு 10 மணி வரை செயல்படுகிறது. மேற்படி டாஸ்மாக் கடையில் சூப்பர்வைசராக கருப்பசாமி என்பவரும், சேல்ஸ்மேன்களாக திரு.லெனின் மற்றும் திரு.சரவணன் ஆகியோர் பணிபுரிந்து வருகிறார்கள். நான் பார் வேலைகள் முழுவதையும் கவனித்து வருகிறேன். கொரோனா தொற்று காரணமாக மார்ச் 2020 மாத இறுதியிலிருந்து டிசம்பர் மாதம் 28.12.2020 தேதி வரை பார் மூடப்பட்டிருந்தது. 29.12.2020 தேதி பார் திறக்கப்பட்டது. பார் திறக்கப்பட்ட ஒரு வாரத்திற்குள் லெனின் மற்றும் சரவணன் ஆகியோர் என்னிடம் Lock down காலத்தில் டாஸ்மாக் மதுபான கடைக்கு செலுத்த வேண்டிய கரெண்ட் பில் ரூ.30,000/-த்தை எனது ஓனரிடம் கட்ட சொல்லி என்னிடம் சொன்னார். அந்த நேரத்தில் பார் செயல்படவில்லை. நான் எனது ஓனர் சிவமணி அவர்களிடம் தெரிவிப்பதாக சொன்னேன். அதன்பின்னர் சுமார் ஒரு வார கழித்து நானும், ஓனரும் பாரில் இருந்த போது மதியம் சுமார் 1 மணியளவில் சேல்ஸ்மேன் லெனின் வந்து எங்கள் தயவில்தான் பார் நடத்துகிறீர்கள். நல்லபடியாக பார் நடத்துவதற்கு எனக்கும், சரவணனுக்கும் மாதம் ரூ.70,000/- மாமூலாக் கொடுத்திருங்க என்றும் பணம் கொடுத்தால் கடைக்கு மது வாங்க வரும் நபர்களை பாருக்குள் அனுப்பி வைப்பதாகவும், பார் சம்பந்தமாக ஏதேனும் புகார்கள் வந்தால் அதனை உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்காமல் இருப்பதற்காகவும் சொன்னார். நான் ஏற்கெனவே கொரோனா தொற்று காரணமாக தொழில் பாதிக்கப்பட்டு வருமானம் இல்லாமல் இருப்பதாகவும், அவர்கள் கேட்கும் பணத்தை குறைத்து சொல்லுமாறு ஓனர் சிவமணி கேட்டார். அதற்கு அவர் கேட்ட பணத்தை குறைக்க முடியாது என்றும் உயர் அதிகாரிகளுக்கு புகார்களை அனுப்பி பார் லைசென்ஸை ரத்து செய்ய வைப்பேன் என்றும், என்னுடைய ஆதரவு இல்லாமல் பாரை நடத்த முடியாது எனவும் மிரட்டினார். தொடர்ந்து லெனின் எங்களிடம் பணம் கேட்டு

வந்தார். நாங்களும் கால தாமதப்படுத்தி வந்தோம். அவர் பணம் தொடர்ந்து கேட்டு வந்ததால் வேறு வழியில்லாமல் எனது ஓனர் பணத்தை கொஞ்சம் குறைத்து கொள்ள கேட்கும் படி என்னிடம் சொன்னார். அதன்படி நான் 25.01.2021ம் தேதி இரவு சுமார் 7.30 மணியளவில் எனது செல்போன் எண்.6379513552 - லிருந்து சேல்ஸ்மேன் லெனின் என்பவரது செல்போன் எண் 81100 57200 - க்கு தொடர்பு கொண்டு பணத்தை குறைத்து கொள்ளுமாறு பேசினேன். அப்போது அவர் பணத்தை குறைக்க முடியாது, என்றும் அவர் கேட்ட மாத மாமூல் தொகை ரூ.70,000/-த்தை கொடுக்கும்படி சொன்னார். அதன்பின்னர் லெனின் அவரது அருகில் இருந்த சரவணனிடம் அவரது செல்போனை கொடுத்து என்னிடம் பேச சொன்னார். சரவணனும், மாமூல் தொகை ரூ.70,000/-த்தை கொடுத்துவிடு அப்பதான், மது வாங்க வரும் நபர்களை பாருக்குள் அனுப்பி வைப்போம், பார் சம்பந்தமாக ஏதேனும் புகார்கள் வந்தால் அதனை உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்காமல் இருக்க நாங்கள் கேட்ட மாமூல் தொகையை கொடுக்கும்படி சொன்னார். நான் போன் பேசும் போது எனது ஓனரும் அருகில் இருந்தார். அவரிடம் இந்த விபரத்தை சொன்னேன். வேறு வழியில்லாமல் எனது ஓனர் மீண்டும் பணத்தை குறைத்து கேட்குமாறு பேச சொன்னதால் நான் 25.01.2021-ம் தேதி இரவு சுமார் 9.50 மணியளவில் எனது செல்போன் எண்ணிலிருந்து லெனின் என்பவரை தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது லெனின் பணம் ரூ.70,000/- கட்டாயமாக 27.01.2021-ம் தேதிக்குள் கொடுக்க வேண்டுமென்றும், பணம் கொடுக்கவில்லை என்றால் உங்கள் பாருக்குள் மது அருந்த யாரும் வராமல் செய்து விடுவோம் என்று சொல்லி போனை வைத்துவிட்டார். நாங்கள் யோசித்து பார்த்ததில் டாஸ்மாக் கடை எண்.2232-ல் சேல்ஸ்மேன்களாக வேலை பார்க்கும் திரு.லெனின் மற்றும் திரு.சரவணன் ஆகியோர்களுக்கு மாதம் ரூ.70,000/- மாமூலாக கொடுக்க எங்களுக்கு விருப்பமில்லை. எனது ஓனர் சிவமணி அவர்கள் கூறியதன் பேரில் நான் மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இடம்: கோவை நாள்: 27.01.2021 இப்படிக்கு, sd/-(xxxx) 27.01.2021 (R.Vinoth). Respected Madam, Received the complaint on 27.01.2021 at 16.00 hrs sd/-(xxxx) 27.01.2021 Inspector of Police, V&AC, Coimbatore. Respected Madam, After conducting discreet enquiry a case in Coimbatore V&AC Cr.No.4/2021/AC/CB U/s.7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was

registered by me on 27.01.2021 at 17.00 hrs sd/-(xxxx) (K.Sasilekha) 27.1.2021, Inspector of Police, V&AC, Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

27.01.2021

(கி.சசிலேகா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.